**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2023-ம் ஆண்டு ஜீன் திங்கள் 16-ம் நாள் வெள்ளிக்கிழமை
(2054 திருவள்ளுவராண்டு சோபகிருது வருடம் ஆனித்திங்கள் 01-ம் நாள்)

I.A.No.6/2021
in
O.S.No.284/2019

1.பழனியம்மாள்
2.பச்சியம்மாள்

... மனுதாரர்கள்/உத்தேசகட்சிக்காரர்கள்

/எதிர்/

1. ராமாயாள் ... எதிர்மனுதாரர்/வாதி
2.சுப்பிரமணியம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 11.04.2023 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.கபில்தேவ் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர்கள்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.சரவணக்குமார் அவர்கள் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1. இந்த மனுவானது, மேற்படி இ.ம.எண்.2/2019-ல் மனுதாரர்களை எதிர்மனுதாரர்/பிரதிவாதியாக சேர்த்துக்கொள்ள அனுமதித்து, உத்தரவு பிறப்பிக்க வேண்டி, கட்டளை 1 விதி 10 பிரிவு 151 சி.பி.சி-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:-

இந்த மனுவானது, அசல் வழக்கில் மனுதாரர்கள் 3-ம் தரப்பினர்கள். வாதி வழக்கு சொத்தின் முழு உரிமையாளர்(Absolute Ownership) என விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தில் பிரதிவாதியோ, அவரது உள்ளீட்டாளர்களோ, எந்தவிதமான இடையூறும் செய்யாமல் இருக்கும் பொருட்டு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கினை தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகின்றது. அசல் வழக்கின் பிரதிவாதி மனுதாரர்களது சகோதரர். மனுதாரர்கள் அனைவரும் நஞ்சமூப்பன் என்பவரின் வாரிசுகள். வழக்கு சொத்து மனுதாரர்களின் தந்தை நஞ்சமூப்பனுக்கு உரிமையாகி அவருடைய அனுபவத்திலிருந்து வந்தவை ஆகும். வழக்கு சொத்துக்கள் குறித்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தா நிலையில் மனுதாரர்கள் தந்தை நஞ்சமூப்பன் மனுதாரர்களையும், பிரதிவாதியையும் வாரிசுகளாக விட்டு விட்டு 1985-ல் காணாமல் போய்விட்டார். மனுதாரர்கள் தந்தை நஞ்சமூப்பன் இருப்பிடம் குறித்து விபரம் எதுவும் இதுநாள் வரையிலும் தெரியவில்லை. மனுதாரர்களும் இயன்ற அளவு முயன்றும் அவர் உயிரோடு இருக்கும் விபரம் தெரிய வரவில்லை. மனுதாரர்களின் இறந்துபோன தாயார் படிப்பறிவு இல்லாதவர், நஞ்சமூப்பன் காணமல் போனது குறித்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்க தவறிவிட்டார். நஞ்சமூப்பன் கடந்த 35 ஆண்டுகளாக காணப்படவீல்லை என்பது குறித்து காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தந்தை நஞ்சமூப்பன் காணாமல் போன பின்னிட்டு மனுதாரர்களும், பிரதிவாதியும் வழக்கு சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம். வழக்கு சொத்தில் மனுதாரர்களுக்கு 2/3 பங்குரிமையும், பிரதிவாதிக்கு 1/3 பங்குரிமையும் உள்ளது. வழக்கு சொத்து தற்பொழுது மனுதாரர்களுக்கு கூட்டு அனுபவத்தில் உள்ளது. மனுதாரர்களுக்கு, பிரதிவாதிக்கும் இடையே பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. இந்நிலையில் பிரதிவாதி அவரது பங்குரிமைக்கும் கூடுதலாக, மனுதாரர்களது

பங்குரிமையும் சேர்த்து 28.10.1988-ல் வாதியுடன் கிரைய அவணம் ஏற்படுத்தி கொண்டதாகவும், அன்றே மறுக்கிரைய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதன் பின்னிட்டு பிரதிவாதி உரிய நேரத்தில் மறுக்கிரைய செய்துக்கொள்ளவில்லை என்பதாகவும், அதனால் வழக்கு சொத்தினை வாதிக்கு உரிமையானது என விளம்புகை செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்த விபரம் தற்பொழுதுதான் மனுதாரர்களுக்கு தெரியும். பிரதிவாதிக்கு வழக்கு சொத்து குறித்து தனிப்பட்ட முறையில் ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை. அந்த ஆவணங்கள் மனுதாரர்களுக்கு தெரியாமல் ஏற்படுத்தப்பட்டது. அது மனுதாரர்களின் பங்குரிமையை பொறுத்து செல்லாது என விளம்புகையும், வழக்கு சொத்தின் பேரில் பங்குரிமைக்காக பாகப்பிரிவினையும் கோரவுள்ளோம். வழக்கு சொத்தின் கூட்டு பங்குதாரர்களான மனுதாரர்களின் உரிமை பாதிப்படையும் வகையில் இவ்வழக்கில் தீர்வு வழங்கப்பட்டால் அது மனுதாரர்களுக்கு பெருத்த இழப்பினை ஏற்படுத்தும். மேலும் வழக்கு சொத்து குறித்து நியாயமான தீர்வினை எட்ட, மனுதாரர்கள் அவசியமான தரப்பினர் ஆவோம். (Necessary party for just decision) மனுதாரர்கள் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் மனுதாரர்களுக்கு பெருத்த இழப்பு ஏற்படும். மேலும் எதிர்மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவிலும் மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படவேண்டியது அவசியமானதாகும் என்று முன் வைக்கப்பட்டுள்ளது.

3. 1<u>-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிர் மனு உரையின் சுருக்கம்</u>:-

1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிர்மனு உரையில், மனுச் சங்கதிகளை வலுவாக மறுத்தும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை உரிய ஆவணங்களுடன் மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனு 2 முதல் 4 வரையுள்ள பாராக்களில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும். இந்த 1ம்

எதிர்மனுதாரர்/வாதி மேற்படி சங்கதிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்படி சங்கதிகள் இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதியை கட்டுப்படுத்துவதில்லை. கடந்த 28.10.1988ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது அனுபவத்தில் உள்ள சொத்தை, இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதி தகுந்த பிரதிபிரயோஜனமாக ரூ.5000/-செலுத்தி கிரையம் பெற்றார். அதே தேதியில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு இடையில் மறுகிரைய உடன்படிக்கையும் எழுதப்பட்டுள்ளது. மறுகிரைய உடன்படிக்கை காலக்கெடு 27.10.1993ம் தேதியுடன் முடிந்துவிட்டது. இந்த மனு/தாவா சொத்தைப் பொறுத்து உத்தேச சட்சிக்காரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் இல்லை. மேலும் உத்தேச கட்சிக்காரர்கள் 28.10.1988ம் தேதிய கிரையம் பெற்று மறுகிரைய உடன்படிக்கை பத்திரத்தில் தரப்பினர்களாகவும் இல்லை. ஆகவே உத்தேச கட்சிக்காரர்களாக தாவாவில் கட்சிக்காரர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. மறுகிரைய உடன்படிக்கை காலகெடு 27.10.1993ம் தேதியுடன் முடிவடைந்து, தாவா சொத்தின் சுவாதீனம் இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதியிடம் 28.10.1988ம் தேதியில் இருந்து தற்பொழுது வரை வாதியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. இந்த மனுதாரர்களுக்கு பங்குபாத்திய உரிமை இருந்தாலும் அற்றுப்போய்விட்டது. (Waived from rights). எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று முன்வைக்கப்பட்டுள்ளது.

4. **தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:**

இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா என்பதே ஆகும்?

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு:-**

6.1. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, வழக்கு கோப்புகள்

பரிசீலிக்கப்பட்டது.

6.2. இந்த மனுவானது, அசல் வழக்கில் மனுதாரர்கள் 3-ம் தரப்பினர்கள் என்றும், வாதி வழக்கு சொத்தின் முழு உரிமையாளர்(Absolute Ownership) என விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்கு சொத்தில் பிரதிவாதியோ, அவரது உள்ளீட்டாளர்களோ, எந்தவிதமான இடையூறும் செய்யாமல் இருக்கும் பொருட்டு, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கினை தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகின்றது என்றும், அசல் வழக்கின் பிரதிவாதி எங்களது சகோதரர் என்றும், மனுதாரர்கள் அனைவரும் நஞ்சமூப்பன் என்பவரின் வாரிசுகள் என்றும், வழக்கு சொத்து மனுதாரர்களின் தந்தை நஞ்சமூப்பனுக்கு உரிமையாகி அவருடைய அனுபவத்திலிருந்து வந்தவை ஆகும் என்றும், வழக்கு சொத்துக்கள் குறித்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தா நிலையில் மனுதாரர்கள் தந்தை நஞ்சமூப்பன் மனுதாரர்களையும், பிரதிவாதியையும் வாரிசுகளாக விட்டு விட்டு 1985-ல் காணாமல் போய்விட்டார் என்றும், மனுதாரர்கள் தந்தை நஞ்சமூப்பன் இருப்பிடம் குறித்து விபரம் எதுவும் இதுநாள் வரையிலும் தெரியவில்லை என்றும், மனுதாரர்களும் இயன்ற அளவு முயன்றும் அவர் உயிரோடு இருக்கும் விபரம் தெரிய வரவில்லை என்றும், மனுதாரர்களின் இறந்துபோன தாயார் படிப்பறிவு இல்லாதவர், நஞ்சமூப்பன் காணமல் போனது குறித்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்க தவறிவிட்டார் என்றும், நஞ்சமூப்பன் கடந்த 35 ஆண்டுகளாக காணப்படவில்லை என்பது குறித்து காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் தந்தை நஞ்சமூப்பன் காணாமல் போன பின்னிட்டு மனுதாரர்களும், பிரதிவாதியும் வழக்கு சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றும், வழக்கு சொத்தில் மனுதாரர்களுக்கு 2/3 பங்குரிமையும், பிரதிவாதிக்கு 1/3 பங்குரிமையும் உள்ளது என்றும், வழக்கு சொத்து தற்பொழுது மனுதாரர்களுக்கு கூட்டு அனுபவத்தில் உள்ளது.மனுதாரர்களுக்கு, பிரதிவாதிக்கும் இடையே பாகப்பிரிவினை எதுவும்

ஏற்படவில்லை என்றும், இந்நிலையில் பிரதிவாதி அவரது பங்குரிமைக்கும் கூடுதலாக, மனுதாரர்களது பங்குரிமையும் சேர்த்து 28.10.1988-ல் வாதியுடன் கிரைய அவணம் ஏற்படுத்தி கொண்டதாகவும், அன்றே மறுக்கிரைய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாகவும், அதன் பின்னிட்டு பிரதிவாதி உரிய நேரத்தில் மறுக்கிரைய செய்துக்கொள்ளவில்லை என்பதாகவும், அதனால் வழக்கு சொத்தினை வாதிக்கு உரிமையானது என விளம்புகை செய்யக் கோரி வழகது தாக்கல் செய்த விபரம் தற்பொழுதுதான் மனுதாரர்களுக்கு தெரியும் என்றும், பிரதிவாதிக்கு வழக்கு சொத்து குறித்து தனிப்பட்ட முறையில் ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றும், அந்த ஆவணங்கள் மனுதாரர்களுக்கு தெரியாமல் ஏற்படுத்தப்பட்டது என்றும், அது மனுதாரர்களின் பங்குரிமையை பொறுத்து செல்லாது என விளம்புகையும், வழக்கு சொத்தின் பேரில் பங்குரிமைக்காக பாகப்பிரிவினையும் கோரவுள்ளோம் என்றும், வழக்கு சொத்தின் கூட்டு பங்குதாரர்களான மனுதாரர்களின் உரிமை பாதிப்படையும் வகையில் இவ்வழக்கில் தீர்வு வழங்கப்பட்டால் அது மனுதாரர்களுக்கு பெருத்த இழப்பினை ஏற்படுத்தும் என்றும், மேலும் வழக்கு சொத்து குறித்து நியாயமான தீர்வினை எட்ட, மனுதாரர்கள் அவசியமான தரப்பினர் ஆவோம் என்றும், (Necessary party for just decision) மனுதாரர்கள் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் மனுதாரர்களுக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்றும், மேலும் எதிர்மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவிலும் மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படவேண்டியது அவசியமானதாகும் என்றும் வாதிட்டார்.

**6.3.** 2-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இந்த மனுவிற்கு ஆட்சேபனையில்லை என்று தெரிவித்துள்ளார்.1-ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், கடந்த 28.10.1988 ம் தேதியில்

2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது அனுபவத்தில் உள்ள சொத்தை, இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதி தகுந்த பிரதிபிரயோஜனமாக ரூ.5000/-செலுத்தி கிரையம் பெற்றார் என்றும், அதே தேதியில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு இடையில் மறுகிரைய உடன்படிக்கையும் எழுதப்பட்டுள்ளது என்றும், மறுகிரைய உடன்படிக்கை காலக்கெடு 27.10.1993ம் தேதியுடன் முடிந்துவிட்டது என்றும், இந்த மனு/தாவா சொத்தைப் பொறுத்து உத்தேச சட்சிக்காரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் இல்லை என்றும், மேலும் உத்தேச கட்சிக்காரர்கள் 28.10.1988ம் தேதிய கிரையம் பெற்று மறுகிரைய உடன்படிக்கை பத்திரத்தில் தரப்பினர்களாகவும் இல்லை என்றும், ஆகவே உத்தேச கட்சிக்காரர்களாக தாவாவில் கட்சிக்காரர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், மறுகிரைய உடன்படிக்கை காலகெடு 27.10.1993ம் தேதியுடன் முடிவடைந்து, தாவா சொத்தின் சுவாதீனம் இந்த 1ம் எதிர்மனுதாரர்/வாதியிடம் 28.10.1988ம் தேதியில் இருந்து தற்பொழுது வரை வாதியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றும், இந்த மனுதாரர்களுக்கு பங்குபாத்திய உரிமை இருந்தாலும் அற்றுப்போய்விட்டது என்றும், (Waived from rights). எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று வாதிட்டார்.

**6.4.** இந்த அசல் வழக்கானது தாவா சொத்தின் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவின் மனுதாரர்கள் மேற்படி வழக்கில் 3-ம் தரப்பினர், மனுதாரர்கள் இந்த வழக்கின் பிரதிவாதியின் சகோதரர் என்றும், அவர்கள் நஞ்சமூப்பன் வாரிசு என்றும், தாவா சொத்து நஞ்சமூப்பனுக்கு உரிமையாகி அவரது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், தாவா சொத்தில் மனுதாரர்களும் கூட்டு பங்குதாரர் என்று கூறியுள்ளார். தாவா சொத்தில் மனுதாரருக்கு உரிமையுள்ளதா இல்லையா என்பதை வழக்கு விசாரணையில் தான் முடிவு

செய்ய இயலும். மனுதாரர்கள் அசல் வழக்கு பிரதிவாதியின் சகோதரர் என்பதினாலும் மனுவில் தான் வழக்கு சொத்தின் கூட்டு பங்குதாரர் என்று குறிப்பிட்டுள்ளதாலும், வழக்கானது தாவா சொத்தின் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர்களையும் இந்த மனுவில் சேர்த்து அவரது தரப்பு விசாரணை மற்றும் ஆவணங்களையும் பரிசிலினை செய்து தீர்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7.முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுதொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜீன் திங்கள் 16-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு
சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.